Enrich, X(II) : 14 - 17, Jan – June, 2019

# ஆசாரக்கோவையில் வாழ்வியல் அறங்கள்

க.சுப்புலட்சுமி, தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தூத்துக்குடி
ஜெ.ஜெயபிரபா, தமிழ் ஆய்வியல் நிறைஞர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

மனிதனையும், சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் ஒழுக்க நெறிகளே 'அறம்' எனப்படுகிறது. மனிதவாழ்வில் சிறப்பையும், செல்வத்தையும் தருவது அறம். அவ்வறத்தை உயிராக எண்ணுதல் வேண்டும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறநூல்கள் என்றழைக்கப்படுகிறது. அத்தகைய அறநூல்களில் ஒன்றான ஆசாரக்கோவை மனிதன் அன்றாட வாழ்வில் பின்பற்றக்கூடிய ஒழுக்கங்களின் தொகுதி என்று குறிப்பிடப்படுகிறது.

**ஆசார வித்துக்கள்**

ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும், ஒழுக்கங்களையும் விதித்துக் கொள்ள வேண்டும். அந்த ஒழுக்கத்தினை உயிராக மதித்து வாழ்தல் வேண்டும் என்பதனை வள்ளுவர்,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** **(குறள்.131)**

எனும் குறட்பா வழி விளக்குகிறார். மனிதன் வாழ்வில் அனுசரிக்க வேண்டிய ஒழுக்கங்களை எட்டு வகையான வித்துக்களாக ஆசாரக்கோவைக் குறிப்பிடுகிறது.

**"நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**
**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**
**நல்லினத்தாரோடு நட்டல் இவையெட்டும்**
**சொல்லிய ஆசார வித்து"** **(ஆ.கோ.பா.எண்.1)**

**தனிமனித அறங்கள்**

ஒழுக்கமான வாழ்வினை மேற்கொள்ளும் ஒருவனால் மட்டுமே சிறந்த சமுதாயத்தை உருவாக்கவும், நல்ல குடிமகனாகத் திகழவும் முடியும் என்பதனை,

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி" (குறள்.137)**

எனும் குறட்பா விளக்குகிறது. ஒருநாள் சிறந்த முறையில் அமையவேண்டுமென்றால் காலை எழுந்தவுடன் அன்று செய்ய வேண்டிய காரியங்களை முதலில் வரிசைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தன்னைப் பெற்றவர்களை மனதில் எண்ணி வணங்கி எழுந்தால் அந்த நாள் இனிமையாக அமையும் என்பதை ஆசாரக்கோவையில்,

**"வைகறை யாமம் துயில் எழுந்து, தான்செய்யும்**
**நல் அறமும் ஒண்பொருளும், சிந்தித்து வாய்வதின்**
**தந்தையும், தாயும் தொழுது எழுக! என்பதே**
**முந்தையோர் கண்ட முறை" (ஆ.கோ.பா.எண்.4)**

எனும் பாடல் விளக்குகின்றது. மாலைப் பொழுதில் உண்ணுதல், உறங்குதல் கூடாது. விளக்கேற்றி இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பதனை,

**“அந்திப்பொழுது, கிடவார், நடவாரே**
**உண்ணார், வெகுளார் விளக்கு இகழார், முன்அந்தி**
**அல்குஉண்டு அடங்கல் வழி” (ஆ.கோ.பா.எண்.29)**

என்னும் பாடல் வரிகள் விளக்குகிறது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தன் வாழ்வின் தேவைகளை நிறைவு செய்யவும், பிறரோடு கூடிவாழவும் சில நெறிகள் இன்றியமையாதவையாக அமைகின்றன.

**சான்றோரின் அறங்கள்**

நன்மை தரும் அறநெறிகளைத் தாம் அணியும் அணிகலன்களாகக் கொள்பவரே சான்றோர் எனப்படுவர். ஒருவர் சான்றோராய் இருக்க வேண்டும் என்றால் பொய், கோள் சொல்லுதல், சூது, கொலை செய்தல் ஆகியவற்றை செய்யார். சான்றோரின் பண்புகளாக,

**“இல்லார்க்கு ஒன்று ஈயும் உடைமையும், இவ்வுலகில்**
**நில்லாமை உள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்**
**துன்புறுவ செய்யாத தூய்மையும், இம்மூன்றும்**
**நன்றறியும் மாந்தர்க் குள” (திரிகடுகம்.பா.எண்.68)**

எனும் பாடல் வழி விளக்குகிறார். துறவிகளைப் போற்றுதல், பழிக்கு அஞ்சுதல், தாம் கற்றதைப் பெரியோர் முன் மறந்தும் சொல்லாதிருத்தல் இம்மூன்றும் சான்றோர்களின் சிறந்த அறமாகக் கருதப்படுகிறது என்பதனை,

**“துறந்தாரைப் பேணலும், நாணலும் தாம்கற்ற**
**மறந்தும் குரவர்முன் சொல்லாமை, மூன்றும்**
**திறம்கண்டார் கண்ட நெறி” (ஆ.கோ.பா.எண்.63)**

எனும் பாடல் அடிகள் விளக்குகின்றன. குணத்தாலும், அறிவாலும் சீரிய பண்பாலும், சமுதாயத்தில் சிறந்து விளங்கும் மனிதர்களே சான்றோர்கள். அறிவுடைச் சான்றோர்கள் பெரியவர் முன் கையினால் ஒன்றைச் சுட்டிக்காட்டிப் பேசமாட்டார். காலால் எதையும் எழுத மாட்டார். பெரியவர் கொடுப்பதை அமர்ந்து கொண்டு கையில் வாங்கமாட்டார் போன்ற அறச் செயல்களைப் பின்பற்றுவர் என்பதனை,

**“கைசுட்டிக் கட்டுரையார், கால்மேல் எழுத்து இடார்**
**மெய்சுட்டி, இல்லாரை உள்ளாரோடு ஒப்புஉரையார்**
**கையில் குரவர் கொடுப்ப, இருந்து ஏலார்,**
**ஐயமில் காட்சி யவர்” (ஆ.கோ.பா.எண்.94)**

என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**இல்லற அறங்கள்**

இல்லறம் என்பது கற்பு வாழ்க்கையாகும். அறம் எனச் சொல்லப்படுவதே இல்லறம். ஒத்த கிழவனும் கிழத்தியும் பலரறிய மணந்து வாழ்வதே இல்லற ஒழுக்கம் என்பதனை,

**“அறம்புரிச் சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இருந்தன் பயனே”(தொல்.நூ.எ.51)**

என்ற தொல்காப்பிய நூற்பா காட்டுகிறது. இல்லறம் என்பது இல்லத்தில் மனைவி, மக்களோடு இருந்து கொண்டு பிறருக்கு உதவியாக வாழ்வது ஆகும். இல்லறமே நல்லறம், அஃது அல்லாத துறவறம் நல்லறம் அன்று என்பதனை,

**“இல்லற மல்லது நல்லற மன்று (கொன்றை வேந்தன்)**

என்று கொன்றை வேந்தன் பாடல் அடிகள் விளக்குகிறது.

இல்லறக் கடமைகளில் ஒன்று விருந்து செய்தல் ஆகும். வருத்தமுடன் தன் இல்லம் நாடி வருபவர்களுக்கு வேண்டுவன வழங்கி அவர்தம் வறுமையைப் போக்குவது விருந்தோம்பலின் அறப்பண்பாகும் என்பதனை,

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு” (குறள்.86)**

எனும் குறள் விளக்குகிறது. வீட்டிற்கு வந்த விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ணவும், இருக்கவும் செய்து அன்பு பாராட்டுவது விருந்தோம்பல் என்பதை,

**“முறுவல் இனிதுரை, கால்நீர், மணைபாய்**
**கிடக்கையோடு, இவ் ஐந்தும் என்ப – தலைச்சென்றார்க்கு**
**ஊணொடு செய்யும் சிறப்பு” (ஆ.கோ.பா.எண்.54)**

எனும் ஆசாரக்கோவை பாடல் விளக்குகிறது. மேலும் மகளிர் எப்பொழுதும் இல்லத்தினைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற அறத்தினை,

**“காட்டுக் களைந்து, கலம்கழீஇ இல்லத்தை**
**ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை**
**நீர்ச்சால் கரகம் நிறைய மலர் அணிந்து**
**இல்லம் பொலிய, அடுப்பினுள் தீப்பெய்க**
**நல்லது உறல் வேண்டு வார்!” (ஆ.கோ.பா.எண்.46)**

என்னும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. “ஆற்றில் போட்டாலும் அளந்து போடு” என்பது பழமொழி. ஒருவன் தன் இல்லற வாழ்வில் அளவுக்கு ஏற்ப செலவு செய்தல் வேண்டும் என்பதனை,

**“அறத்தொடு, கல்யாணம் ஆள்வினை, கூரை**
**இறப்பப் பெருக்கியக் கண்ணும் திறப்பட்டார்**
**மன்னரின் மேம்படச் செய்யற்க! செய்பவேல்**
**மன்னிய செல்வம் கெடும்” (ஆ.கோ.பா.எண்.85)**

என்னும் பாடல் விளக்குகிறது. இல்வாழ்க்கையில் வரும் விருந்தினரை ஓம்புதலும் சுற்றத்தாரை உபசரிப்பதும், இரவார்க்கு ஈதலும் முக்கிய அறங்களாகும்.

**ஈகை அறங்கள்**

அறங்கள் பலவற்றிலும் தலைசிறந்தது ஈகை அறமாகும். இருப்பவர் இரப்பவர்களுக்குக் கொடுப்பது ஈகை. தன்னிடம் உள்ள செல்வம் வறியவர்களுக்குப் பயன்படுமாறு அதனைக் கொடுத்தல் வேண்டும். இதனையே ஈகைப் பண்பு என்று கூறுவர். பண்டைத் தமிழர்கள், மறுமைப்பயன் நோக்காது பிறர் வறுமையைப் போக்குதலைக் கடமையாகக் கொண்டு அறம் செய்தனர். இத்தகைய ஈகையின் பண்பினை,

**“மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு**
**உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்**
**ஈதல் இசையா தெனினும் இரவாமை**

**ஈதல் இரட்டி யுறும்''** **(நாலடி.பா.எ.95)**

என்று நாலடியார் எடுத்துரைக்கிறது. ஈகைக்குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும். எனவே வள்ளுவர் ஈகைக்குணமே உயிரின் ஊதியம் என்று கூறுகின்றார். இதனை,

**''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு'' (குறள்.231)**

என்று கூறுவதன் மூலம் அறியலாம். ஒருவருடைய துன்பத்திற்கு அவர் வேண்டுவன அறிந்து உதவுதலே ஈகையாகும். சான்றோர்கள் தன் அன்றாட வாழ்வில் விருந்தினர்கள், முதியவர்கள், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் ஆகியோர்க்கு உணவு அளித்த பின்புதான் உணவு உண்ணுவர் எனும் ஈகை அறத்தினை,

**''விருந்தினர், மூத்தோர், பசுசிறை பிள்ளை**

**இவர்க்குஊண் கொடுத்து அல்லால் உண்ணாரே என்றும்**

**ஒழுக்கம் பிழையா தவர்''** **(ஆ.கோ.பா.எண்.21)**

எனும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. ஒருவர்க்கு ஒரு பொருளை எவ்விதப் பயனும் கருதாது அளித்தலே சிறந்தது என்பதை உறுதியாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதனை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மனித வாழ்வு ஆரோக்கியமாகத் திகழ ஒழுக்கம் என்னும் மருந்து தேவையாக இருப்பதை நீதிநூற்கள் வலியுறுத்துகின்றன. இன்றைய சமூக வாழ்க்கையைக் கட்டமைத்தது இவ்வற இலக்கியங்கள் ஆகும். ஒழுக்கத்தில் இருந்து தான் அறங்கள் தோன்றுகின்றன. எனவே நல்லொழுக்கத்தைப் பேணிக் காப்பது இன்றைய சமூகத்தின் தேவை ஆகின்றது என்பதை ஆசாரக்கோவை என்னும் நூல் மூலம் இக்கட்டுரை வலியுறுத்துகின்றதை அறியலாம்.

**துணை நூற்பட்டியல்**

1) திருவள்ளுவர், திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப-2019
2) தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் நல்லாதனார், திரிகடுகம், சாரதாபதிப்பகம் சென்னை, மு.ப-2005
3) நாலடியார், சாரதா பதிப்பகம் சென்னை, மு.ப-2005
4) பெருவாயின் முள்ளியார், ஆசாரக்கோவை சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப-2005